# பிரியதத்தத்தினாலே பூரணமானவளே!

எங்கு அதிக பரிசுத்ததனம் இருக்கின்றதோ அங்கு அதிக நேசமும் இருக்கின்றதென்று அர்ச்.அன்செல்ம் சொல்லுகிறார். ஒருவன் எவ்வளவுக்குத் தூய இருதயமுடையவனாயும் சுயநலப் பற்று அற்றவனாகவும் இருப்பானோ அவ்வளவுக்குத் தேவ சிநேகம் அவனிடம் குடி கொள்ளும். சம்மனசுக்களின் இராக்கினியான மகா பரிசுத்த கன்னிமரியம்மாள் தூய இருதயமுடையவர்களாகவும், தனது சுயநலத்தை அணுவளவேனும் உணராதவர்களா யுமிருந்தமையால் தேவ சிநேகத்தினால் பூரணமாய் நிரப்பப்பட்டார்கள். இதுபற்றியே அர்ச்.பிரான்சிஸ் சலேசியார் அவர்களை நேசத்தின் இராக்கினி என்று அழைக்கின்றார். உன் கர்த்தாவான சர்வேசுரனை உன் முழு இருதயத்தோடு சிநேகிப்பாயாக என்ற பெரிய கட்டளையை அவர்கள் முற்றும் நிறைவேற்றுகிறார்கள்.

அளவற்ற நேசம் நிறைந்த சர்வேசுரன் மனிதருடைய இருதயங்களை தமது சிநேகத்தின் அக்கினியினால் எரியப் பண்ணும்படி இவ்வுலகத்துக்கு வந்தார். “நான் பூமியில் அக்கினியைப் போட வந்தேன்” என்று சேசுநாதர் சுவாமி திருவாய் மலர்ந்தருளினார். ஆனால் அவர் தேவ அக்கினியால் தமது மாதாவின் இருதயத்தை மூட்டினதுபோல வேறெந்த இருதயத்தையும் மூட்டவில்லை. பூவுலக விஷயங்களை அறவே வெறுத்து பரலோக காரியங்களை ஆவலுடன் தேடினமையால் மரியாயின் இருதயம் தேவ அக்கினி சுவாலையாக சதா எரிந்து கொண்டிருந்தது.

சர்வேசுரன் அவர்களுடைய ஆழ்ந்த தாழ்ச்சியைக் கிருபாகடாட்சத்துடன் நோக்கியருளினார். திவ்விய இரட்சகரின் பேறுபலன்களை முன்னிட்டு அர்ச். கன்னிமரியம்மாள் ஜென்மப் பாவதோஷத்தினின்று நீக்கப்பட்டார்கள். தனது உற்பவத்தின் கணத்திலிருந்தே தன் திருக்குமாரனின் நிமித்தம் அரும்பெரும் வரப்பிரசாதங்களாலும் பரலோக

நற்கொடைகளாலும் அபரிமிதமாய் நிரப்பப்பட்டார்கள். பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரன் கன்னிமரியாயை தமது நேச குமாரத்தியாகவும்; சுதனாகிய சர்வேசுரன் தமது அன்புள்ள மாதாவாகவும்; இஸ்பிரித்துசாந்துவாகிய சர்வேசுரன் தமது ஞானப் பத்தினியாகவும் தெரிந்துகொண்டனர். ஆதாமின் குமாரத்திகளுக்குள்ளே அன்புக்குரியவளாய் விளங்குகின்றவர் அர்ச்.கன்னிமரியாயேயன்றி வேறல்ல. இதினிமித்தமே அர்ச். கபிரியேல் சம்மனசானவர் அவர்களுக்கு மங்கள வார்த்தை சொன்னபோது, **பிரியதத்தத்தினாலே பூரணமானவளே** என்ற அவர்களை அழைத்தார். மனிதருடைய புகழுரைகள் சில சமயங்களில் நம்பக்கூடாததவையாகயிருக்கின்றன. ஆனால் தேவ சந்நிதானத்தில் பணிவிடை செய்யும் அதிதூதரின் வார்த்தைகள் அப்படிப்பட்டவை அல்ல. சர்வேசுரன் தமக்குக் கொடுத்த கட்டளையை நிறைவேற்ற அவர் வீணான வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. "பிரியதத்தத்தினாலே பூரணமானவளே" என்று அவர் மொழிந்த மங்கள வாழ்த்துதல் மரியாயிக்குச் சாலவும் பொருந்தும். அவர்களுடைய மேலான அந்தஸ்தினையும், ஆச்சரியமான சுதந்திரங்களையும், பரிசுத்தமான சீவியத்தையும் சிந்திப்பவர்கள் இவ்வுண்மையைத் தெளிவாய் உணருவார்கள்.

இவ்விதமாக சர்வேசுரனுடைய உன்னத வரப்பிரசாதங்களால் நிரப்பப்பட்டு, அவருடைய நேசத்தில் தனது வாழ்நாட்களைக் கழித்து வந்த அர்ச். கன்னிமரியம்மாள் தன்னுடைய தாசர்களும் தன்னைப் போல் சர்வேசுரனைச் சிநேகிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். சர்வேசுரனை நேசிப்பதற்கு நாம் பாவத்தையும், பாவநாட்டங்களையும், ஆத்துமத்துக்கு ஆபத்தான சந்தர்ப்பங்களையும் தூர அகற்றி, புண்ணிய பாதையில் நடக்க வேண்டும். பயத்தைவிட நேசமானது பன்மடங்கு மேலானது. பாவத்தின் ஆக்கினைக்கு அஞ்சி தேவ கட்டளைகளை அனுசரிப்பதைப் பார்க்கிலும், நம்மைச் சிநேகித்து நமக்காகத் தமது

உயிரைப் பலியாகத் தந்த திவ்விய சேசுவின் நேசத்திற்காக சீவிப்பது உத்தமம்.

புதிய வேதப்பிரமாணம், சிநேகத்தின் பிரமாணம். நாம் சர்வேசுரனை நேசிக்க வேண்டுமென்பது தேவ கட்டளை. தேவ உதவியும், பரிசுத்த கன்னிகையின் வல்லபமுள்ள மன்றாட்டும், நமது பிரயாசை முயற்சிகளும் நமக்கு இந்நற்கொடையை அடைந்துகொடுக்கும் என்பதற்கு ஐயமில்லை. நாம் மென்மேலும் தேவ சிநேகத்தில் வளரும்படியாக, “பிரியதத்தத்தினாலே பூரணமான” தேவ அன்னையை நோக்கி அனுதினமும் மன்றாடுவோமாக!